CC 25/2012 21.02.2024

**அசா.5 சரவணன் த-பெ. அய்யனார்.**

**(சாட்சி சத்தியப்பிரமானம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது.)**

**குறுக்குவிசாரணை: (எதிரி தரப்பில்)**

நீங்கள் எதிரியான அமராவதி ஊரான பழையூர்பட்டி ஊரைச்சேர்ந்தவர்கள் என்றால் ஆமாம். இவ்வழக்கில் புகார் கொடுத்த தனம் உங்களுக்கு பங்காளி உறவுமுறை என்று சொன்னால் சரிதான், எதிரியும் உறவுமுறை சார்ந்தவர்தான்.
எதிரி அமராவதி குடும்பத்திற்கும் உங்கள் குடும்பத்திற்கு கிணற்று பிரச்சனை சம்மந்தமாக 18 வருடங்களாக பேச்சு வார்த்தை இல்லை என்று சொன்னால் ஆமாம். இவ்வழக்கில் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால் ஆமாம். புகாரில் சொல்லப்பட்டது போல எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றும், வாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சி அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.